
ஆர்த்ரோஸ்கோப்பி சிகிச்சையின் நன்மைகள்

- தோள்பட்டையில் **சிறிய துளைகள்** மட்டுமே செய்யப்படும், பெரிய வெட்டு காயம் தேவையில்லை
- **குறைந்த வலி** மற்றும் **விரைவான குணமடைதல்**
- **முழுமையான இயக்க சுதந்திரம்** மீண்டும் கிடைக்கும்.
- **விரைவில் மீண்டும் தனது தினசரி இயல்பான செயல்களில்** மீண்டும் ஈடுபட முடியும்.
- **ஆர்த்ரோஸ்கோப்பி சிகிச்சை**, பொதுவாக பயன்படுத்தப்படும் 'மயக்கத்தில் தோளை இயக்குவது' (Mobilisation under Anaesthesia) **முறையை விட மேல், ஏனெனில் இது தோள்பட்டையின்மூட்டின் உள்ளே உருவான பிடிமானத்தை நேரடியாகப் பார்த்து முழுமையான நிவாரணத்தை அளிக்கிறது.**







ஏன் ஜெயம் மருத்துவமனையை தேர்வுசெய்ய வேண்டும்?

- **எலும்பியல், மூட்டு பாதுகாப்பு (Joint Preservation)** மற்றும் **தசைநார் காயங்கள் (Ligament Injuries)** சிறப்பு சிகிச்சை மையம்
- **அனுபவமிக்க நிபுணர் மருத்துவர்கள்** – ஆர்த்ரோஸ்கோப்பி (Arthroscopy) மற்றும் எலும்பியல் சிகிச்சையில் சிறப்பு கவனம்
- **நவீன, உயர்தர, இறக்குமதி** செய்யப்பட்ட ஆர்த்ரோஸ்கோப்பி உபகரணங்கள் கொண்டு சிகிச்சை
- **அனைத்து வகை காப்பீட்டுகள் (Insurance)** ஏற்றுக்கொள்ளப்படும்
- **நோயாளி நலனையே** முதன்மையாகக் கொண்ட சிகிச்சை



மருத்துவர் ரவிச்சந்திரன்
MBBS.,M.S.Ortho.,D.Ortho.,DNB Ortho
எலும்பியல் மற்றும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்



மரு.அரவிந்த் ரவிச்சந்திரன்
MBBS.,M.S.Ortho.,FASM (ISAKOS)
எலும்பியல் மற்றும் ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை நிபுணர்

எங்களை தொடர்பு கொள்ள

ஜெயம் மருத்துவமனை
முகவரி: No. 3, அப்துல் கபர் கான் வீதி,
சின்னச் சோக்கியக்குளம்,
மதுரை – 625002,

7010893812



ஜெயம் மருத்துவமனை





உறைந்த தோள்பட்டை

(Frozen Shoulder/ Adhesive Capsulitis)

நோயாளி தகவல் சிற்றேடு

உறைந்த தோள்பட்டை என்றால் என்ன?

- தோள்பட்டை மூட்டில் **உள்ள மூட்டு உறை இறுக்கமாகி,** தோள்பட்டை நன்றாக அசைய முடியாத நிலையே **"உறைந்த தோள்பட்டை"**-(Frozen Shoulder) ஆகும்.
- இது **பொதுவாக 40–60 வயதிற்கிடையில்** அதிகமாகக் காணப்படுகிறது.
- **சர்க்கரை நோயாளிகள் (Diabetes)** மற்றும் தோளில் காயம்/அறுவைசிகிச்சை செய்தவர்களுக்கு அதிக வாய்ப்பு உண்டு.



ஏன் இந்த உறைந்த தோள்பட்டை வருகிறது?

- தோளின் உள்ளே இருக்கும் மூட்டு ஜவ்வு இறுகிவிடுதல்
- இது **சர்க்கரை நோய் மற்றும் தைராய்டு** பிரச்சனை உள்ளவர்களில் பொதுவாக காணப்படுகிறது
- **நீண்ட நாட்கள்** தோள் மூட்டைப் **பயன்படுத்தாமல்** இருப்பது
- சில நேரங்களில் **தெளிவான காரணம் இல்லாமல் தானாகவே** (Idiopathic) ஏற்படலாம்



உறைந்த தோள்பட்டை அறிகுறிகள்

- **தோள்பட்டை வலி**
- **கையின் அசைவு குறைவு** – உயரமாக தூக்க முடியாமை, பின்புறம் வைக்க முடியாமை
- **இரவில் வலி அதிகம்** – தூங்குவதற்கு இடையூறு
- **தினசரி வேலைகளில் சிரமம்** – உடை அணிதல், தலைமுடி சீவுதல், மேலே பொருள் எடுப்பது

மேலே கூறிய அறிகுறிகளில் ஏதேனும் இருந்தால், உங்களுக்கு உறைந்த தோள்பட்டை இருக்கக்கூடும்.

உடனே மருத்துவரை அணுகுங்கள்.

உறைந்த தோள்பட்டை எப்படி கண்டறியப்படுகிறது?

- முதலில் மருத்துவர் உங்கள் **தோள்பட்டையின் இயக்கத்தை பரிசோதிப்பார்.**
- அதன் பிறகு, **எக்ஸ்-ரே (X-Ray) மற்றும் எம்.ஆர்.ஐ (MRI)** பரிசோதனைகள் மூலம் உறுதி செய்யப்படுகிறது.
- எம்.ஆர்.ஐ (MRI) பரிசோதனை உறைந்த தோள்பட்டையின் **தீவிரத்தையும், தோளில் உள்ள பிற பிரச்சனைகள்** (உதாரணம்: தசை கிழிவு) உள்ளதா என்பதை அறியவும் உதவுகிறது.

உறைந்த தோள்பட்டைக்கு தீர்வு என்ன ?

- **ஆரம்ப கட்டங்களில்** தோள்பட்டை இயக்கப் **பயிற்சிகள் மற்றும் ஸ்டெராய்டு ஊசி** மூலம் முயற்சி செய்யலாம். சில சமயங்களில் மயக்கத்தில் பலவந்தமாக தோளை இயக்கும் (Mobilisation under Anaesthesia) முறையும் செய்யப்படலாம்.





- **இதனால் பலன் கிடைக்காவிட்டால், ஆர்த்ரோஸ்கோப்பி எனப்படும் சிறிய கேமரா** முறையில் சிகிச்சை சிறந்த பலன் கிடைக்கிறது.
- இதில் தோள்பட்டையின் உள்ளே உருவான **பிடிமானத்தை (ஒட்டிக்கிடக்கும் பகுதி) நீக்குவதன் மூலம்** மூட்டின் இயக்கம் சுதந்திரமாகி, நோயாளிக்கு முழுமையான நிவாரணம் கிடைக்கிறது.
- இது தற்போது உறைந்த தோள்பட்டைக்கு **மிகச் சிறந்த மற்றும் நவீன சிகிச்சை முறையாகக் கருதப்படுகிறது.**

